1970 ஆகஸ்ட் 25]

திரு. தோ. மு. நல்லசாமி: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டினுடைய நிலைமைக்கு மாறாக, இந்த ஆண்டு கரும்பு பயிரிடப்படுவது அடுத்த அறவை ஆண்டுக்கு தமிழகத்தில் உள்ள அத்தனை ஆலைகளுக்கும் தேவையான அளவு பயிரிடப்படவில்லை. அதனால் அடுத்த ஆண்டில் அறவை நிலை பாதிக்கப்படுகின்ற நிலையை ஆலைகளை வைத்திருக்கும் முதலாளிகள் அல்லது கூட்டுறவு ஸ்தாபனத்திலுள்ள நிர்வாகஸ்தர்கள் உணருகின்றார்கள். அந்த நிலைமை அரசாங்கத்திற்குத் தெரியுமா? இந்த நிலைமை இருக்கும்பொழுது மீண்டும் சர்க்கரை ஆலைகள் திறப்பது பற்றி 'ரீ-திங்கிங்', புனராலோசனை தேவையில்லையா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்னால் விளக்கியபடி ஒவ்வொரு ஆலைக்கும் எந்தெந்தப் பகுதிகளில் எத்தனை எத்தனை ஏக்கர்கள் நிலத்தில் கரும்பு பயிரிடப்படும் என்று பதிவு செய்யப்படுகின்றது. அந்தந்த ஆலைக்கு பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் கட்டாயம் கரும்பு கொடுக்கவேண்டுமென்ற விதிகள் இருக்கின்றன. கரும்பு விலைக் குறைவும், சர்க்கரை ஆலைகளில் சில தகராறுகள் ஏற்படுகிற காரணத்தினாலும் ஆங்காங்கு உள்ள விவசாயிகள் தயக்கம் காட்டுகிறார்கள். கூட்டுறவு ஆலையானாலும் சரி, தனியார் ஆலையானாலும் சரி, அவர்களோடு இணைக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளோடு தொடர்பு கொண்டு, அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான அளவுக்கு விலையைக் கொடுப்பதற்கும், உற்பத்தி செய்த கரும்பை தகராறு காரணமாக தேக்கம் இல்லாமல் அரைத்துக் கொடுப்பதற்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

வள்ளியூரில் சிமெண்ட் தொழிற்சாலை

*15. **வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதா?

(இ) ஆமெனில், ஆலை நிறுவும் திட்டம் தற்போது என்ன நிலைமையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம். தனியார் துறை தொழிலதிபர் ஒருவருக்கு 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நான்குனேரியில் ஆண்டொன்றுக்கு 52,000 டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்று நிறுவ பூர்வாங்க அனுமதி வழங்கப்பட்டது.

(இ) ஆலை நிறுவும் திட்டம் தொழிலதிபரால் கைவிடப்பட்டது.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: 1965-ல் தனியாருக்கு இதற்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது; அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. வள்ளியூர் தொழில் துறையிலே, தொழில் அபிவிருத்தி

பிலே பின்தங்கிய பிரதேசமாக இருப்பதால், இங்கு சிமெண்ட் ஆலையை அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கு ஏதாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது ஆலை அங்கு இல்லை. ஆகவே, அதை ஏற்று நடத்த முடியாது. புதிதாகத் தொடங்கப்படவேண்டும். சர்க்கரையைப் போலவே சிமெண்டு தென்னாட்டில், குறிப்பாக தமிழகத்தில் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு, இதனை விற்பதற்கு வெளிநாடுகளை, வெளி மாநிலங்களை, குறிப்பாக வட பகுதி மாநிலங்களை எதிர்பார்க்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் பூல் பிரைஸ், எங்கு விற்றாலும், ஒரே விலைக்கு விற்கவேண்டும் என்ற கருத்தை ஓரளவுக்கு இடைக் காலத்தில் மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. நமது ஆலைகளில் உற்பத்தி செய்யக்கூடிய சிமெண்டு விற்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, புதிதாகத் தொடங்கப்பட வேண்டுமென்றால், கனம் அங்கத்தினர் அவர்கள் அதற்குச் சிறந்த முயற்சி எடுத்து, தொழில் அதிபர் யாரையாவது தயார் செய்து கொண்டு வருவார்களேயானால், அதற்கு ஒத்துழைப்பு கொடுப்பது பற்றி யோசிக்கலாம்.

Central Board of Trade

* 17 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether representatives of (i) private sector from this State and (ii) the State Government have been included in the Central Board of Trade; and

(b) if so, the grounds on which they were included ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) (i) "மத்திய வர்த்தக வாரியத்தின்" அரசு சார்பற்ற பிரதிநிதிகளாக நமது மாநிலத்தி லிருந்து கீழ்க்கண்டவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(a) திரு. எம். ஏ. சிதம்பரம்.

(b) திரு. டி. சி. கோத்தாரி.

(c) திரு. பி. எஸ். லோகநாதன்.

(ii) வர்த்தக வாரியத்தில் மாநில அரசின் பிரதிநிதிகள் எவருமில்லை.

(இ) வர்த்தக வாரியத்தின் அமைப்பு, அவற்றை ஏற்படுத்தல் ஆகியவற்றை இந்திய அரசின் வெளிநாட்டு வர்த்தக அமைச்சு கவனித்துக் கொள்கிறது. மாநில அரசுக்கு அவை குறித்து எந்தத் தொடர்புமில்லை. அரசுச் சார்பற்ற பிரதிநிதிகள் எக்காரணங்களால் அதில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவில்லை.